1993 ஏப்ரல் 16]

371—

சைதாப்பேட்டைப் பகுதியில் கேபிள் மூலம் மின்சாரம் வழங்கல்.

*9540—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டைப் பகுதியில் மின்சாரக் கம்பங்களை அகற்றி கேபிள் மூலம் மின்சாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏற்கனவே சைதாப்பேட்டையின் சில தெருக்களில் கேபிள் மூலம் மின்சாரம் வழங்குவதற்காக பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. முடிக்கப்படாத தெருக்களில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழில்மிகு சென்னை 2000ஐ நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிற கால கட்டத்தில் என்னுடைய தொகுதியில் ஈக்காட்டுத்தாங்கல், மடுவாங்கரை, கிண்டி தொழிற்பேட்டை, சி.ஐ.டி. நகர் போன்ற பல பகுதிகளில் மரக் கிளைகளின் அடியில் மின்சாரம் சென்று கொண்டிருப்பதால், மழைக் காலங்களில் பலத்த காற்று மூலமாகவும் மரக்கிளைகள் முறிந்து விழுவதாலும், கம்பிகள் முறிந்து மின்சாரம் பாய்ந்து தொடர்ந்து பல ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்துக்கொண்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் பல பகுதிகளில் வீடுகளைக்கூட உயர்த்திக் கட்டக் கூட தடையாக இருந்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கணக்கு எடுக்கப்பட்டு குறிப்பு தயாரிக்கப்பட்டு வருவதாக சொல்லியிருக்கிறார்கள். வேகமாக செய்து முடிப்பதிலே வல்லமை படைத்த நமது அமைச்சர் அவர்கள் இதை விரைவில் செய்து முடிபபாரா என்று அறிய விரும்புவதோடு இதற்கு 1993-94ஆம் ஆண்டிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே 4 லட்சத்து 67 ஆயிரத்து 170 ரூபாய்க்கு இதுவரை பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. வண்டிக்காரன் தெரு, சி.ஐ.டி. நகர், முதல் குறுக்கு தெரு, மேற்கு சி.ஐ.டி நகர், 2-வது குறுக்கு தெரு போன்ற இடங்களில் பணி முடிக்கப்பட்டிருக்கிறது. மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. அதற்குப் பின்னாலே பழைய மாம்பலம் பகுதியிலே வேலை எடுக்கப்பட உள்ளது. 13 தெருக்கள் அதிலே இருக்கின்றன. ஒவ்வொன்றையும் எடுத்து தனிததனியாக பட்டியல் போட்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு தருகிறேன். ஆகவே அந்தத் தொகுதியைப் பொறுத்த மட்டிலே இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு அந்தப் பணிகள் எல்லாம் எடுத்து செய்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஈக்காட்டுத்தாங்கல், மடுவாங்கரை, கிண்டி தொழிற்பேட்டை பகுதிகள் எல்லாம் மிகப் பெரிய இடங்களாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுகிறபோது பல தெருக்களைத்தான் சொல்லியிருக்கிறார்கள். மிகப் பெரிய பகுதிகளாக இருக்கிற இடங்களில் கேபிள்கள் தொடர்ந்து சென்று கொண்டிருப்பதால் ஆபத்துக்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அங்கே வீடுகளை உயரக் கட்ட முடியவில்லை என்று பொது மக்களிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே 1993-94ஆம் ஆண்டிற்குள்ளாவது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உறுப்பினர் தெரிவித்ததைப் போல எழில்மிகு சென்னை 2000 என்ற அளவிலே 225 கோடி ரூபாய்க்கு மின் திட்டங்களை சென்னை நகரிலே நிறைவேற்றிட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு இட்டிருக்கிறார்கள். அதற்காக ஆசிய வங்கியிடம் உதவிகளை பெற்றிருக்கிறோம். நிதி ஆதாரம் வருவதைப் பொறுத்து செய்வோம். உடனடியாக அத்தனை காரியங்களையும் செய்துவிட முடியாது. ஒவ்வொரு தொகுதியிலேயும் முக்கியமான பிரச்சினைகள் இருக்கிற பகுதியிலே முன் உரிமை கொடுத்து செய்கிறோம். ஆகவே படிப்படியாக இந்தப் பணிகள் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 372, திரு. ஏ. டி. செல்லசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்